யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 193 ஆங்கீரச வைகாசி 25 (07.06.1992) ஞாயிறு


## மட்டக்களப்பில் தமிழர்கள் ஓய்வூதியம் பெற கெடுபிடி

மட்டக்களப்பு செயலகத்தில் உள்ள ஓய்வூதியத் திணைக்களத்தில் தமிழ் மக்கள் ஓய்வூதியம் பெறச் சென்றால் பெரும் கெடுபிடிகள் இடம்பெறுவதாக மட்டக்களப்புச் செய்திகள் கூறுகின்றன. இடம் பெயர்ந்து வெளியிடங்களில் தங்கியுள்ள தமிழர்களை மட்டக்களப்புக்கு வரச்செய்வதற்கும் இவ் நிருவாக முறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

# ஜனாதிபதி தமிழ்க் கட்சிகள் அடுத்தவாரம் சந்திப்பு

## வீரச்சாவு

முல்லைத்தீவு அலம்பிலில் இடம்பெற்ற மோதலில் லெப். அருள் பேனாக் (அழகையா தம்பிராசா மட்டக்களப்பு), 2ஆம் லெப் மோகன் -குமுதன் (தம்பிமுத்து பேரின்பம் - அம்பாறை). 2ஆம் லெப் வெலிங்டன் (ஆனந்தராசா சிவபாலன் நாச்சிகுடா) வீரச்சாவை எய்தினர்

## மக்கள் அஞ்சலி

முல்லைத்தீவில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவை

...04 ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முயற்சி?

வடக்கு கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவும் ஜனாதிபதி பிரேமதாஸ சில தமிழ் அரசியல் கட்சிகளுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்த விரும்புவதாக பி. பி. ஸி, தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து சுதந்திரக்கட்சி விலகியதை படுத்தே அவர் இந்த முடிவு எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து சுதந்திரக் கட்சி விலகாது தொடர்ந்தும் அதில் அங்கம்வகிக்க எடுத்த முயற்சிகள் பயனளிக்காதது குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இரண்டு மாதத்தில் முடிவு காணப்படும் என பிரதமரும், அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவும் அண்மையில் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது,

## ஷெல் தாக்குதல்

முல்லைத்தீவு இராணுவத்தினர் குடியிருப்புக்கள் மீது தொடர்ந்தும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## சைப்பிரஸ் நிருபர்கள் புலிகளின் பிரமுகர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்துள்ள சைப்பிரஸ் நாட்டு தொலைக்காட்சி நிருபர்கள் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்து பேசியதாக தெரிவிக்கப்படுகிறது

அத்துடன் இங்குள்ள தொண்டர் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்தனர்.

தமிழ் மக்கள் மீதான படையினரின் தாக்குதல்கள், பொருளாதார தடை என்பன குறித்தும் இவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

## ஆதரவாளர்க்கு 7 வருடச் சிறை

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படுவோருக்கு ஏழு வருடகாலச் சிறைத்தண்டனை வழங்கப்படுமெனத் தமிழக அரசு நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது

அத்துடன் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்களும் தடைசெய்யப்படுமெனவும் தமிழக அரசு அறிவித்துள்ளது

## ● யாழ் வந்த சைப்பிரஸ் நிருபர்கள் சேதமான பகுதிகளை வீடியோ படம் எடுத்தனர்

யாழ்ப்பாணம் வந்துள்ள சைப்பிரஸ் தொலைக்காட்சி செய்தியாளர்கள் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட சில இடங்களுக்கும் நேற்றுச் சென்று வீடியோ படம் எடுத்தனர்,

குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளான பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள், அகதி முகாம்கள் அரச கட்டிடங்கள் உட்பட பல்வேறு இடங்களையும் வீடியோ படம் எடுத்துள்ளனர், 47 07

## வயோதிபர் மரணம்

மண்டைதீவில் இ. விசாலாட்சி (70 வயது) என்ற வயோதிப மாது இறந்துவிட்டதாக அங்கிருந்து வந்த செய்திகள் மூலம் அறியவந்துள்ளது.

இவருடன் இதுவரை மண்டைதீவில் ஏழு பேர் இறந்துவிட்டதாகவும் தற்போது அங்கு 37 பேர் மட்டுமே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 28

## கொழும்பு நகர்ப்பகுதி தொடர்ந்தும் பாதிப்பு

கொழும்பில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை, புயல் காற்றினால் மாநகரப் பகுதி தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

பல அரச தனியார் அலுவலகங்கள், தொழிற்சாலைகள் இயங்கவில்லை, சில வீதிகளூடாக போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

வீடுகளை இழந்தவர்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன

வெள்ளம் தொடர்ந்து பாய்வதாலும் மழைபெய்வதாலும் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாமல் உள்ளது (47)

## தனிச்சிங்களக் கடிதங்கள் தொடர்ந்தும் வருகின்றன

கொழும்பிலுள்ள உள்ளூராட்சி சேவை ஓய்வூதியக் கிளையிலிருந்து தமிழ் பகுதிகளிலுள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கு அனுப்பப்படும் சகல கடிதங்களும் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன.

இதனால் இவ் ஓய்வூதியகாரர் இவ் அலுவலகத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதுடன் சிங்களம் தெரிந்தவர்களிடம் மொழி பெயர்ப்புக்காக அலைந்து திரிவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது

அத்துடன் இங்கிருந்து அனுப்பிவைக்கப்படும் மிகமுக்கியமடிதங்கள் இலைபிழையாக விலாசமிடப்பட்டு அனுப்பி வைக்கப்படுவதனால் உரியவர்களின் கரத்தில் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 15

## 25 குளங்களை புனரமைக்க போரூட் நிறுவனம் நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள 6 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருக்கும் 25 பிரதானமான குளங்களைப் புனரமைப்புச் செய்ய போரூட் நிறுவனம் முன்வந்துள்ளது

யாழ்ப்பாணம், சங்கானை சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள பிரதானமான 25 குளங்களே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன

மேற்படி 25 குளங்களையும் யாழ்ப்பாணம் வந்துள்ள போரூட் பிரதிநிதிகள் பார்வையிட்டனர். 18

## வலிவடக்கு அகதிகளுக்கு ஒரு வாரம் நிவாரணம்

வலி வடக்கில் இருந்து கடந்த வாரம் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு வார காலத்துக்கு இலவச உலர் உணவு வழங்கப்படவுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

உடுவில், சண்டிலிப்பாய். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் இந்த இலவச உலர் உணவு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்,

அடுத்த வார முற்பகுதியில் பல நோ. கூ. சங்கங்கள் மூலமாக உணவுப் பொருள்கள் இவர்களுக்கு வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 47

## அச்சுவேலி பகுதியில் கடும் மழை

நேற்று முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1 மணி வரை அச்சுவேலி, ஆவரங்கால் புத்தூர் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய பெரும் மழை பெய்துள்ளது. வீதிகளில் வெள்ளம் பாய்வதைக் காண முடிந்தது. 43

## அச்சுவேலியில் வதந்தியால் மக்கள் வெளியேறினர்

அச்சுவேலிப் பகுதியில் நேற்று இராணுவம் வருவதாக சிலர் வதந்தியைப் பரப்பியதையடுத்து மழை, பெரும் காற்றையும் பொருட்படுத்தாது மக்கள் நனைந்தபடி வெளியேறியதைக் காணமுடிந்தது

நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள இடங்களில் இருந்து வாகனங்களின் இரைச்சலும் வெடிச்சத்தங்களும் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்தவர்களும் வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## ஆட்பதிவு ஊழியருக்கு கஷ்ட நிவாரணம் இல்லை

யாழ் ஆட்பதிவுத் திணைக்கள ஊழியர்களுக்கு 1990ஆம் ஆண்டுக்கான கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது

யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் எல்லா அரச ஊழியர்களும் பெற்றுக் கொண்ட இக் கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த நால்வருக்கு மட்டும் வழங்கப்படாமை சுட்டிக்காட்டப்பட்டது

அமைச்சரவையும், இக்கொடுப்பனவுகளை வழங்குவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது 25

## துர்க்கை அம்மன் ஆலய சம்பவம் இராணுவ உயர் விசாரணை

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீதான விமானக் குண்டு வீச்சு தாக்குதல் குறித்து இராணுவ உயர்மட்ட விசாரணை நடைபெறுவதாக சிங்கள பி. பி. ஸி தெரிவித்தது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது தாம் தாக்குதல் நடத்தவில்லை என இராணுவத்தினர் கூறியிருப்பதாகவும் சிங்கள பி.பி.ஸி தெரிவித்தது

புலிகளின் முகாமுக்கே தாம் தாக்குதல் நடத்தியதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்

★ யாழ், முல்லை, கிளி., மன்னார் தொண்டர் ஆசிரியர்களுக்கு

# சகஜநிலை ஏற்பட்டதன் பின்னரேயே நிரந்தர நியமனம்

வட மாகாணத்தில் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இல்லாத யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டதாக கல்விச் சேவை சபையின் செயலாளர் எம். ஏ. வீரரத்ன கடந்த புதன்கிழமை கொழும்பில் தெரிவித்தார்.

இந்த நான்கு மாவட்டங்களிலும் சகஜநிலை ஏற்பட்டதன் பின்னரேயே அங்குள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் இதற்கென ஆயிரம் நியமனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் போலி சான்றிதழ்களுடன் நிரந்தர ஆசிரிய நியமனம் பெற்ற சுமார் 50 தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. தொண்டர் ஆசிரியர்களுக்கு போலிச் சான்றிதழ் வழங்கிய தனியார் பாடசாலை அதிபர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

எண்ணாயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கல்வி அமைச்சு ஏற்கனவே முடிவு செய்திருந்தது இதற்கு அமைய 6 அயிரம் பேருக்கு ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்டு விட்டது.

தொண்டர் ஆசிரிய நியமனங்கள் தொடர்பாக கல்விச் சேவை சபைக்கு 6 ஆயிரம் அப்பீல் மனு கிடைத்துள்ளது. அவை தொடர்பாக ஆராயப்பட்டுவருகிறது. அப்பீல் மனுக்களுக்கென 1000 நியமனங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன என திரு. வீரரத்ன மேலும் தெரிவித்தார். (35)

## கங்கை ஆற்று நீருடன் பிரேஸில்செல்லும் இந்துத் தலைவர்

இந்தியாவின் இந்து மதப் பிரிவு ஒன்றின் தலைவர் ஒருவர் கங்கை ஆற்றின் அசுத்த நீரைப் போத்தலில் அடைத்துக்கொண்டு பிரேஸிலில் நடைபெறும் உலகச் சுற்றாடல் உச்சி மாநாட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்தியாவிலுள்ள ஆறுகளில் மிகவும் புனிதமானது எனக் கருதப்படுவதும் மிகவும் அசுத்தமாக்கப்பட்டிருப்பதுமான கங்கை ஆற்றைச் சுத்தப்படுத்துவதற்கு மகாந்த் வீர் பத்ரா மிஷ்ரா என்ற இந்த இந்து மதத் தலைவர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்காக உச்சி மகாநாட்டில் வைத்து அவருக்குக் கௌரவ விருதொன்று வழங்கப்படவுள்ளது.

கங்கை ஆற்றில் ஸ்நானஞ் செய்வதால் வாழ்நாள் பூராவுமுள்ள பாவங்கள் கழுவப்படுவதாக இந்துக்கள் நம்புகிறார்கள்.

கங்கை ஆற்று ஓரத்தில் தினமும் நூற்றுக்கணக்கான இந்துக்களின் சடலங்கள் தகனஞ் செய்யப்படுகின்றன. போதியளவு விறகுகளை வாங்கப் பணமில்லாத ஏழைக்குடும்பத்தவர்கள் தகனஞ் செய்யும் சடலங்கள் அரைகுறையாக எரிந்த நிலையில் ஆற்றில் மிதந்து வருகின்றன. இதனால் ஆறு அசுத்தப் படுகிறது.

## தெரிவுக்குழு விரைவில் மீண்டும் கூடலாம்

இனப்பிரச்சினைக்கான தீர்வின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் கூடும் என்று தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள மூனசிங்க தெரிவித்துள்ளார்.

தீர்வின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு சுதந்திரக் கட்சி பகிஷ்கரிப்பு முடிவிலிருந்து தெரிவுக்குழுவுக்கு விலக்கு அளிப்பது பற்றித் தற்போது ஆராய்ந்து வருகிறது என்றும் மூனசிங்க கூறினார்.

சு.க. வின் இந்த மனமாற்றம் விரைவில் நல்ல முடிவைத்தரும் என்றும் தெரிவுக்குழு சு.க. எம்.பிக்களின் பங்களிப்புடன் விரைவில் மீண்டும் கூடுமெனவும் மூனசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

## இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் விலை அதிகரிப்பு

அனைத்து இறக்குமதி மருந்துவகைகளினதும் விலைகள் இவ்வாரம் முதல் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

பாதுகாப்பு வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக அனைத்து இறக்குமதி மருந்து வகைகளினதும் விலைகளையும் அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டிருப்பதாக மருந்துவகை இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

புதிய விலை அதிகரிப்புப்படி முன்னர் 10 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்ட மருந்தின் புதிய விலை 10 ரூபா 30 சதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

## அமைச்சர் இரா. நெடுஞ்செழியனுக்கு அமெரிக்காவில் திடீர் சத்திரசிகிச்சை

தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியனுக்கு நேற்று முன்தினம் அமெரிக்காவில் இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கையில் மார்பு வலி ஏற்பட்டதையடுத்து அவருக்கு உடனடியாக அங்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

சிகிச்சைக்கான ஏற்பாடுகள் அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தினால் செய்யப்பட்டிருந்தன.

## அகதிமுகாமிலும் அரிசி விலையில் பாகுபாடு

அம்பாறை மாவட்டத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ளோருக்கு நிவாரண உதவி வழங்குவதில் பேதம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்கள் தங்கியுள்ள ரகுமானியாபுரம் முகாமிலும் தமிழர்கள் தங்கியுள்ள வீரமுனை முகாமிலும் அரிசி விநியோகத்தில் பாகுபாடு காட்டப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது

ரகுமானியாபுரம் முகாமில் ஒருகிலோ அரிசி ரூ 16. 60 சதமாகவும், வீரமுனை முகாமில் இதே அரிசி ரூ. 17 50 சதமாகவும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## வீராங்கனைக்கு செவன நிதி

சாவ் விளையாட்டுப் போட்டி வீராங்கனையும் பார்ஸலோனாவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவஞ் செய்யவிருப்பவருமான செல்வி சிறியாணி புலவன்ஸவுக்குச் செவன நிதியத்திலிருந்து 35 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஒருநாகல வெலன் கொலனி மத்திய தர வீடமைப்புத் திட்டத்தில் ஒரு துண்டுக் காணியும் இவருக்கு வழங்கப்படவுள்ளது.


### சிறு விளம்பரம்

**சங்கீத வினாவிடை**

சங்கீத வினாவிடை கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், ஞானசுரபி, பாலாஜி, தினேஷ், மக்கின், மண்டேலா, ஆசிலோன், சோபிதா ஸ்ரீ காந்தா, ஸ்ரீலங்கா, ஸ்ரீ காந்த், வலம்புரி, சுப்பிரமணியம், பிரசாந்தி, அறிவாலயம். 06013

**நீமியா உரம்**

நீமியா உரம் பயிர் பாதுகாப்புக்கும் அதிகவிளைச்சலுக்கும் உதவுகிறது. கிலோ ரூபா 15/= 20 கிலோ ரூபா 260/= அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மிக்கவைற். 06017

**மலை வேம்பு விதை**

மலை வேம்பு விதை தேவை மிக்கவைற். யாழ்ப்பாணம். 06019

**ஜோதிட விஞ்ஞானம்**

கைரேகை சாஸ்திரம், எண்ஜோதிடம், ஜாதகங்கள், விவாகப் பொருத்தங்கள் விஞ்ஞான ரீதியாகக் கணிக்க, பார்வையிட (தினமும் காலை 9 மணிக்கு முன்) நேரில் சந்திக்கவும்.

PROF. சத்தியதாஸன் (MECH. E, ELEC. E, ஞானப்ஸ, சித்தன்கேணிச் சந்தி. 0 6020


## 25 வருடமாக இயங்கிவரும் மட்டு.களஞ்சியத்தை மூட உத்தரவு

மட்டக்களப்பு உரக் களஞ்சியத்தை இம் மாதத்துடன் மூடிவிடுமாறு கொழும்புத் தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 25 வருடத்திற்கும் மேலாக இவ் உரக் களஞ்சியம் மட்டக்களப்பில் இயங்கிவருகிறது.

இதனை மூடிவிட எடுக்கப்படும் நடவடிக்கையால் மட்டக்களப்புப் பகுதியில் உரத்திற்குத் தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## 18 வைத்திய அதிகாரிகளுக்கு 2வருடமாகியும் நியமனம் இல்லை

யாழ். மருத்துவக் கல்லூரியில் உதவி வைத்திய அதிகாரிகளாகப் பயிற்சி பெற்று 1990 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் வெளியேறிய 18 உதவி வைத்திய அதிகாரிகளுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கொழும்பு, களுத்துறை ஆகிய மருத்துவக் கல்லூரிகளிலிருந்து இவர்களுக்குப் பின்னர் வெளியேறிய உதவி வைத்திய அதிகாரிகளுக்கு இம்மாத நடுப்பகுதிக்குள் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது

வட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் கீழ் உள்ள கிராமப்புற வைத்தியசாலைகளில் சுமார் 40 உதவி வைத்திய அதிகாரிகள் வெற்றிடங்கள் உள்ள அதேவேளை மூன்று வருடங்கள் பயிற்சி பெற்ற 18 உதவி வைத்தியர்களும் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நியமனம் கிடைக்காமல் விரக்தி நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அத்திவாரம் தொட்டு முகடுவரை தமிழர் வீடுகளில் அபகரிப்பு!

திருமலையில் மீளக்குடியமர்த்தல் நடவடிக்கையிலும் தமிழர்கள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

அண்மையில் நடைபெற்ற வன்செயல்களில் தமிழர்களின் பாரம்பரிய கிராமங்களான சாம்பல்தீவு, கும்புறுப்பிட்டி, நிலாவெளி, இச்சவெளி திரியாய், புல்மோட்டை ஆகிய பகுதிகள் முற்று முழுதாக சேதமாக்கப்பட்டன இந்தப் பகுதிகளில் ஏற்கனவே வாழ்ந்த சிங்கள மக்களை அரசு மீளக்குடியேற்ற நடவடிக்கை மேற்கொண்டாலும் பாரம்பரிய பிரதேசங்களுக்குரிய தமிழ்மக்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

குறிப்பாக திருமலை நகர்ப்புறத்திலுள்ள வீரநகர் பகுதியில் சிங்கள மக்களை மட்டுமே குடியேற்ற அரசு நடவடிக்கையெடுத்துள்ளது. இங்கு தமிழர்களின் வீடுகளை பட்டப்பகலிலேயே உடைத்து அத்திவாரம் தொட்டு முகடு வரை கட்டிடப் பொருள்களை அபகரித்து சிங்களமக்கள் வீடுகள் கட்டியுள்ளனர்.

## ராஜீவ்கொலை வழக்கு இரகஸியமாக நடைபெற்றது

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை யூன் மாதம் முதலாம் திகதியன்று செங்கற்பட்டு உபசிறைச்சாலையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இரகஸியமாக நடைபெற்றது என யூன் 4 ஆம் திகதி வெளிவந்த 'இந்து' பத்திரிகையின் செய்தியொன்று கூறுகிறது.

தற்பொழுது நீதமன்ற பாதுகாப்பிலுள்ள 26 எதிரிகளும் பூர்வாங்க விசாரணை நடத்திய நீதிபதி இனாப் எச்.எம். சித்திக் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் 'இந்து' தெரிவித்துள்ளது.

## யானையின்ஏதேனும் பாகத்தினை ஏற்றுமதி செய்யத் தடை!

தேசிய ஒதுக்கிடமொன்றிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உல்லாசப் பயண விடுதிகள் கட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

அத்துடன் தேசிய ஒதுக்கிடத்தில் ஏதேனும் வன விலங்கை வேட்டையாடவும் முடியாது.

இந்தச் சட்டத்தின் படி யானை ஒன்றின் ஏதேனும் பாகத்தினை ஏற்றுமதி செய்வதும் தடை செய்யப்படும்.


### தொழில் வாய்ப்பு

இயேசு ஜீவிக்கிறார் பணியகத்தில் மாதாந்த தமிழ் சஞ்சிகைகளை ஆங்கில மொழியில் ஆங்கில இலக்கியத்துடன் மொழி பெயர்க்கக் கூடியவர்கள் (வேதாகம அனுபவமுள்ளவர், கிறிஸ்தவர்கள் வரவேற்கத் தக்கது) தேவை.

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், ஆங்கில மொழியில் தெளிவு பெற்றவர்கள் கீழ்க்காணப்படும் முகவரிகளில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

இயேசு ஜீவிக்கிறார்
த பெ எண். 1044
கொழும்பு

இயேசு ஜீவிக்கிறார்
31/34 கிராண்பாஸ் வீதி
கொழும்பு - 14

06021

# இவ்வார இராசிப்பலன்

**7 . 06 . 1992  13 - 06 - 1992**

### மேடம்

உங்களுக்குவரும்திடீர், திடீர் கோபத்தால் பிறர் மீது அடிக்கடி எரிந்து விழுவீர்கள் மனத்தில் பணயோசனை. அதனால் தலையிடி உடல் சோர்வு கொடுக்கும். உற்ற சகோதரமும், பெற்றோரும் குறை குற்றம் சொல்லி வேதனை தருவார்கள் தொழில் ஸ்தானத்தில் குறை குற்றம் கேட்க இடமுண்டு 12, 13 ஆம் திகதிகளில் எச்சரிக்கையாக இருக்கவும்.

### இடபம்

உங்களுக்கு எதிர்ப்பாளரால் வேதனையும் சோதனையும் ஏற்படும் சுபமங்களகரமான பேச்சுக்களில் பங்குபற்றச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். நீங்கள் செய்யாத செயலுக்காக வீணாகக் குற்றம் சுமத்தப்படுவீர்கள். தொழிலிடத்தில் மனக்குரோதமும், நண்பர்களால் நன்மையான பலன்களும் நடக்கும், தூர தேசப் பிரயாணங்களைத் தவிருங்கள்.

### மிதுனம்

உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளால் உதவிகள் கிடைக்கும். அடிக்கடி களைப்பு ஏற்படும், உறவினர் ஒருவரின் கஷ்டத்தில் பங்கேற்றுச் செயற்படுவீர்கள், புதிய நண்பர்களை நம்ப வேண்டாம் கொடுக்கல் வாங்கலில் ஓரளவு நன்மைகள் உண்டு. பொருள் செலவு அல்லது இழப்பைக் கொடுக்கும். இக்காலம் தெய்வ வேண்டுதல் முக்கியம்.

### கடகம்

நீங்கள் முன்னர் திட்டமிட்ட அலுவலொன்று இக்காலம் நலமையாக முடியும், தொற்று நோயாலும் காயங்களாலும் வேதனை வரும் உங்களைப்பற்றி தவறான செய்தியொன்று பலர் மத்தியில் உலவ வரும், தொழில் ஸ்தானத்தில் கடமையில் கவனமாக இருந்து சமாளித்துக் கொள்ளுங்கள்.

### சிங்கம்

உங்களுக்கு பிறரால் வீண் தொல்லைகள் ஏற்படும் இனஜனங்களுக்கு உதவிசெய்து குறைகேட்பீர்கள். குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக சில திட்டங்கள் தீட்டுவீர்கள், காணி பூமி சம்பந்தமான அலுவல்களால் பொருட் செலவுகள் அதிகரிக்கும், தொழில் ஸ்தானத்தில் உதவிகள் கிடைக்கும்

### கன்னி

உங்களுக்கு சகோதரர்களால் வீண்பிரச்சினைகள் ஏற்படும், தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளும், நண்பர்களும் உதவிகளை செய்வார்கள், உங்களின் செயற்பாடால் வீண் சச்சரவுகள் ஏற்பட்டு கவலைப்படுவீர்கள், போக்குவரத்தில் காயங்கள் வரலாம் மிகக் கவனமாக இருக்கவும்.

**நல்லூர் சோதிடர்**
**இ. மகாதேவா**

### துலாம்

உங்களுக்கு அயலவர்களாலும், திடீர் நண்பர்களாலும் வேதனைகள் ஏற்படும். அடிக்கடி அலைச்சல் ஏற்படும் உறவினர்கள் வீண்பழி சுமத்துவார்கள், எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்படும் காணி பூமி சம்பந்தமான மாற்றங்கள் பேச்சுவார்த்தைகள் சிலருக்கு ஏற்படும்.

### விருச்சிகம்

உங்கள் குடும்பத்தினருடன் நீங்கள் அபிப்பிராயப் பேதப்படுவீர்கள், தூரத்துச் செய்திகளால் பணவரவு கிடைக்க வழியுண்டு, சிலருக்கு திடீர் பிரயாண யோசனைகள் ஏற்படும் "கலகம் பிறந்து நியாயம் பிறக்கும்" என இருப்பதால், எவ்விஷயத்திலும் விடாது ஊக்கமாக இருந்து செயற்படுங்கள் வெற்றி கிடைக்கும்,

### தனு

உங்களின் விடாமுயற்சியால் பல காரியங்கள் கைகூடும். சொல்வாக்கால் செல்வாக்கு அடைய முயற்சி செய்யுங்கள். பொருளொன்று களவு போகலாம். குடும்பத்தினரின் வைத்தியச் செலவால் கலக்கம் ஏற்படும். அடிக்கடி களைப்பு ஏற்படும், ஓய்வு எடுக்காது விடில் உடல் நிலை பாதிப்பு ஏற்பட இடமுண்டு.

### மகரம்

உங்களுக்கு காரியங்கள் கைகூடாமல் வேதனை தரும் - அலைச்சலும், பொருட் செலவும் வேதனை தரும். இனஜனங்களால் வீண்பழி ஏற்படும் இடமாற்றம் சகஜம் பிரயாணத்தால் களைப்பு காயங்கள் சிலருக்கு ஏற்படலாம், 7, 8 ஆம் திகதிகளில் கவனமாக இருக்கவும்.

### கும்பம்

உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாளரால் வீண் பிரச்சினைகள் ஏற்படும், காணி பூமி சம்பந்தமான பேச்சுவார்த்தைகளும், சகோதர உதவிகளும் கிடைக்கும், அடிக்கடி மனத்தில் பயம் ஏற்பட்டபடி இருக்கும், இனஜனங்களின் சுபமங்கள காரியங்களில் ஈடுபாடுகள் ஏற்படும், 8, 9 ஆம் திகதிகளில் அவதானமாக இருக்கவும்.

### மீனம்

உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் புதிய யோசனைகள் ஏற்படும் புதிய பேச்சுவார்த்தைகள் நற்பலன்களைக் கொடுக்க இடமில்லை. உறவினர்களின் உதவிகளும் கடன்காரர்களின் தொல்லைகளும் ஏற்படும், 10, 11, 12 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் செய்து கஷ்டப்பட வேண்டாம்,

## 'வாசிக்கப்படாத வாக்குமூலத்தில் ஒப்பமிடக் கோரி சித்திரவதை'

மட்டுநகர் தாண்டவவெளியைச் சேர்ந்த நாகமணி சுந்தரலிங்கத்தை நீதிமன்றில் ஆஜர் செய்து விடுதலை செய்யுமாறு அவரது மனைவி மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் "மட்டுநகர் இ. போ. ச. வின் நேரப் பதிவாளரான எனது கணவர் 25 - 11 - 91 இல் அவரது வேலைத்தலத்தில் வைத்து இராணுவ அதிகாரிகளினால் கைதானார் 17 - 12 - 91 வரை மட்டுநகர் சிறையில் வைக்கப்பட்டிருந்த வேளையில் சித்திரவதைக்கு ஆளானார் வாக்குமூலம் ஒன்றில் கைச்சாத்திட வற்புறுத்தப்பட்டார். அது வாசிக்கப்படவும் இல்லை விளங்கப்படுத்தப்படவும் இல்லை —கைது செய்யப்பட்டமைக்கான காரணம் கூறப்படவும் இல்லை" என திருமதி சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## தமிழக மகளிர்குழு மலை ஏறிச் சாதனை!

தமிழ் நாட்டைச் சேர்ந்த 34 உறுப்பினர் மகளிர்குழுவொன்று நேபாளத்திலுள்ள இமயமலைத்தொடரின் அன்னபூரணா சிகரத்தை சென்றடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

180 கிலோ மீற்றர் தூர மலைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்து இச்சாதனை புரிந்துள்ள இந்த தமிழக குழு முழுவதும் மகளிரைக் கொண்ட முதல் குழுவென்ற பெருமையையும் பெறுகிறது

11 வயது சிறுமியொருவரும் இக்குழுவில் அங்கம் வகித்துள்ளார்.

## நவாலியில் 75 மைல்தூர சைக்கிளோட்டப் போட்டி

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் ஆண்களுக்கான மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதில் தமிழீழ எல்லைக்குட்பட்ட அனைத்து வீரர்களும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

சைக்கிள் 75 மைலும், மரதன் 20 மைலும் ஆக இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன என சங்கத் தலைவர் கோணேஸ்வரன் தெரிவித்தார். (04)

## காங்கேசன்துறை ஊடாக வெளியூர் தபால்கள் வரும்?

யாழ். மாவட்டத்திற்கான வெளியூர் தபால்களை காங்கேசன்துறைக்கு வரும் கப்பல்களில் துரிதமாக அனுப்பி அங்கிருந்து கீரிமலை, சேந்தான்குளம் ஊடாக உணவு லொறிகளில் யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது பருத்தித்துறைக்கு மாதந்தோறும் வரும் கப்பல்களிலேயே தபால்கள் எடுத்துவரப்படுகின்றன.

இதனால் பல அசௌகரியங்கள் பொதுமக்களுக்கும் அரச திணைக்களங்களுக்கும் ஏற்பட்டுவருவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது 47

## பகிரங்க வாழ்வுக்குத் திரும்ப ருஷ்திக்கு சாதக நிலை

பிரிட்டனிலும், ஈரானிலும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதனால் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து தான் வெளியே வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாகச் சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்தி கூறியுள்ளார்.

பெயர் குறிப்பிடப்படாத ஓரிடத்திலிருந்து தொலைக்காட்சிச் சேவையொன்றுக்குப் பேட்டியளித்த அவர் அரசியல்வாதிகள் கலந்து பேசித் தனக்குச் சாதகமான முடிவொன்றை எடுப்பார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

இவரின் "சாத்தானின் வேதங்கள்" என்னும் ஆங்கில நூல் நபிகள் நாயகத்தை அவதூறு படுத்துகின்றது என்று 1989 இல் அறிவித்த ஈரானின் ஆத்மீகத் தலைவர் அயத்துல்லா கொமெய்னி அவருக்கு மரண தண்டனையையும் விதித்திருந்தார்.

## யாழ். பெரியாஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்கு புதிய முறை

யாழ் பெரியாஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் நம்பர் முறை ஒழிக்கப்பட்டுள்ளது

இதுவரை காலமும் கிளினிக்குக்கு வரும் நோயாளர்களில் பலர் நம்பர் முறையினால் குறிப்பிட்ட அளவு நம்பர் முடிந்ததும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

தூர இடங்களிலிருந்து வந்து திரும்பிச் சென்ற நோயாளர்களே இவ்வாறு திரும்பிச் செல்கின்றனர்

இவர்களின் கஷ்டங்களை நீக்குமுகமாகவே கண்சிகிச்சை கிளினிக்கின் புதிய பிரிவு நாளை திங்கட்கிழமையிலிருந்து வெளிநோயாளர் பிரிவின் மேல்மாடியில் இயங்கவுள்ளது

காலையிலிருந்து வரும் நோயாளர்களை பகல் வரையில் புதிய கண்கிளினிக்கில் பார்வையிடப்பட்டு அங்குள்ள வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்ட பின்பே உட்பகுதியில் உள்ள கண்சிகிச்சைப்பகுதிக்கு வைத்திய நிபுணர் பார்வையிடுவதற்கு அனுப்பப்படுவர்.

மிகுதியாக உள்ளவர்களுக்கு பிறிதொரு தினத்திற்கு வந்து காண்பிக்கும்படி திகதி போட்டுக் கொடுக்கப்படும்

சாதாரண கண் கோதிப்பிற்குள்ளாகியிருப்பவர்களை கீழ்ப்பகுதியில் காட்டும்படி அனுமதிக்கப்படுவர். (07)

## வயிற்றோட்டம், காய்ச்சல் இரு குழந்தைகள் மரணம்

வயிற்றோட்டத்தினாலும், நெருப்புக்காய்ச்சலினாலும் பீடிக்கப்பட்டு யாழ் பெரியாஸ்பத்திரி விடுதியில் சிகிச்சை பெற்று வந்த ஒரு வயதுக்குட்பட்ட இரு குழந்தைகள் நேற்று முன்தினம் மரணமாகின.

வயிற்றோட்டத்தால் பீடிக்கப்பட்ட சிவாஜினி செல்வராஜா (மூளாய்), ஏழுமாதக் குழந்தையும் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வி பிரசாந்தி (அளவெட்டி) என்ற [illegible] மாதக் குழந்தையுமே இவ்வாறு மரணமானவர்களாவர் 07

## இந்து கலைக்களஞ்சியத்தின் இரண்டாவது தொகுப்பு

"இந்து" கலைக்களஞ்சியத்தின் இரண்டாவது தொகுப்பு இவ்வருட இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளது.

கலாநிதி ஏ. பத்மநாதன் இவ் நூலின் பதிப்பாசிரியராக அப்பணிபுரிந்து வருகிறார்.

இந்துசமய கலாசார அமைச்சு இந்நூலினை வெளியிடவுள்ளது.

## இரட்சணிய சேவைப் பிரதிநிதிகள் யாழ் நகரில்

இரட்சணிய சேவையின் பிரதிநிதிகள் இருவர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

போறூக் நிறுவனம் பிரதிநிதிகளுடன் வந்த இவர்கள் யாழ் குடாநாட்டு நிலைமை பற்றி அறிந்துகொள்வர் எனவும் நாளைவரை இவர்கள் இங்கு தங்கியிருப்பர் எனவும் தெரிகிறது.

## யாழ்ற்றன் அதிபர் ஓய்வு பெறுகிறார்

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் அதிபர் ச சேனாதிராசா அதிபர் சேவையிலிருந்து இன்றுமுதல் ஓய்வு பெறுகிறார்

நீண்டகாலப் பிரதி அதிபராகக் கடமை புரிந்த இவர் 1989 முதல் இக் கல்லூரியின் அதிபராக சிறப்பான சேவை புரிந்துள்ளார்,

பாடசாலை மாணவர்களுக்குச்சீருடை தயாரிப்பை அறிமுகம் செய்து அவர்கள் தினமும் அதனை அணிந்து கொள்வதையும் இவர் தனதுசேவைக்காலத்தில் முக்கிய பணியாக மேற்கொண்டு பலரதும் பாராட்டைப் பெற்றிருந்தார்

இக்கல்லூரி கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற சிறந்த வழிகாட்டியாக இவர் திகழ்ந்திருந்தார்.

## மே மாத சுட்டெண்

1992 மே மாதத்திற்கான வாழ்க்கைச் செலவு சுட்டெண் 1245.1 என கொழும்பு குடிசன மதிப்பு புள்ளி விபரப் பகுதி அறிவித்துள்ளது.

## சங்கானை முகாம்களுக்கு பேருரூட் பிரதிநிதிகள் விஜயம்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில பேருரூட் நிறுவனத்தினால நடத்தப் படும் 21 அகதி முகாம்களில 11 அகதி முகாம்களை கொழும்பிலிருந்து வந்த புதன் யாழ்ப்பாணம் வந்துள்ள 4பேரூ பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

இன்றைய சூழ் நிலையில இம்முகாம்கள் மேலும் சிறப்பாக இயங்க தம்மாலான உதவிகளைச் செய்வதாக அவர்கள் கூறினர். (18)

## கும்பகோணம் குண்டு வெடிப்பு காவலாளி உட்பட இருவர் கைது

தமிழகத்தில உள்ள கும்பகோணம் தொலைத்தொடர்பு நிலையத்தில் கடந்த மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்

இங்கு காவலாளியாக பணி புரிந்த ஒருவரும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

## யாழ். ஆஸ்பத்திரியிலும் பிறப்பு பத்திரம் இல்லை

யாழ் பெரியாஸ்பத்திரியில் பிறக்கும் குழந்தைகளுக்குரிய பிறப்புப் பதிவுப்பத்திரங்கள் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் முடிவடைந்த பின்னர் கடந்தமாத முற்பகுதியில வழங்கப்பட்டு வந்தது அவை திரும்பவும் முடிவடைந்து விட்டன

ஒருமாத காலமாக பிறப்புப் பதிவுப் பத்திரங்கள் இன்றியே தாய்மார்கள் விடுதியைவிட்டு வெளியேறிவருகின்றனர்

தினமும் பிறப்புப்பதிவுப்பத்திரங்களைப் பெறுவதற்கு யாழ் வைத்தியசாலைக்குபெற்றோர் வந்து திரும்புகின்றனர் 07

## உ. அ. அதிபர் அலுவலகங்களில் 13 எழுது வினைஞர் நியமனம்

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 13 பேருக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அலுவலகங்களில் பணி புரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என யாழ் செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த ஏனையோருக்கும் அரச திணைக்களங்களில் பணிபுரிய நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வெற்றிடம் நிரப்பும் நடவடிக்கைக்கு சுகாதாரப் பகுதியின் கேட்ட தொகையை விட குறைந்தவர்களையே செயலகம் தந்துள்ளதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் 47

## விசர்நாய்க்கடித்தடுப்பூசி இம்முறையும் குறைவே

குமணகப்பலில் இம்முறை அனுப்பிவைக்கப்பட்டுள்ள விசர் நாய்க் கடித்தடுப்பூசி மருந்து யாழ் மாவட்டத்தில் விசர் நாய்க்கடியினால் பாதிக்கப்படுபவர்களுக்கே போதாதிருப்பதாக சுகாதாரப்பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு இம் முறை வழங்கப்பட்ட ஏ ஆர் வி மருந்து முன்னர் பதியப்பட்ட விசர்நாய்க் கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கே போதுமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது

யாழ் மாவட்டத்திற்கு விசர் நாய்க்கடித்தடுப்பூசி மருந்தின் அவசிய தேவை குறித்துப் பல தடவைகள் கொழும்புக்கு தெரிவிக்கப்பட்டும் ஒவ்வொருமுறையும் கேட்கப்படும் தொகையை விட குறைவாகவே இம் மருந்து அனுப்பப்படுவதாகவும் சுகாதாரப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 07

## ஆறு நாள் வீதி விபத்தில் 25 பேர் காயம் ஒருவர்பலி

யாழ்ப்பாணப்பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துக்களில் இருவர் காயப்பட்டனர்

செம்மணி வீதி மயானப் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தம்பு குணசீலன் 30) என்பவர் கால் முறிந்தநிலையில் காயமடைந்தார்

கல்வியங்காடு - பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளும்-சைக்கிளும்மோதியதில ஞானபாஸ்கரோதய பாடசாலை மாணவியான செல்வி கபிலா இராசதுரை (09) என்பவரும் காயப்பட்டார்

கடந்த ஆறுநாள்களுக்குள் யாழ் குடாவில் பலவேறு இடங்களில ஏற்பட்டவாகன விபத்துக்களில 25 பேர் வரையில் படுகாயமடைந்திருக்கின்றனர் மாணவன் ஒருவனும் பலியாகியுள்ளார் (07)

## 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் மழையினால் அகதிகள்

தெற்கில் கடந்த வியாழன் முதல் பெய்துவரும் கடும் மழை காரணமாக இது வரை ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் அகதிகளாகியுள்ளனர்

தொடர்ந்தும் மழை இப்பகுதிகளில் பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது

வெள்ளத்தில் மூழ்கி 5 பேர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறெற் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில், உள்ள அச்சகத்தில் 07-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

ரஞ்சன் கொலை, குண்டு வெடிப்பு

# இணைந்த குற்றப் பத்திரிகை

# சட்டமா அதிபர் வாபஸ்

முன்னாள் அமைச்சசர் ரஞ்சன் விஜேரட்ன கொலை கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு இரண்டும் இணைந்த குற்றப் பத்திரிகையை சட்டமா அதிபர் விலக்கிக் கொண்டார்

பொன்னையா சுரேந்திரன் என்ற இளைஞர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டுப்படைத் தலைமையகம், ரஞ்சன் கொலை இணைந்த குற்றச் சாட்டு திக்கைவம்பலம் தயாபரன் ரொபின் என்ற கிளிநொச்சி இளைஞர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

## அதிசிரேஷ்டராக தெரிவு

கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி அதிபரும், கல்முனை மத்திய கொத்தணி அதிபருமான வண. சகோ, எஸ். ஏ. ஐ மத்தியூ (எவ் எஸ். ஜே.) இலங்கையிலுள்ள புனித வளனார் துறவற சபையின் அதி சிரேஷ்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

## பழைய மாணவர் கூட்டம்

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு மேற்படி வித்தியாலயம் இயங்கும் உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும்

இக் கூட்டத்திற்குச் சகல பழைய மாணவர்களையும் சமூகமளிக்குமாறு வித்தியாலய கொத்தணி அதிபர் கை. பேரின்பநாயகம் கேட்டுள்ளார் 28

## அப்புறப்படுத்த முடியவில்லை

கடந்த வாரம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் சில கிளைகளில் இருந்து பலலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மீட்க முடியாத நிலையில் இருப்பதாக தெரிகிறது.

தெல்லிப்பழை சந்தி முதலாம் இலக்க கிளை இரும்புக்கடை, புடைவைக் கடை ஆகியவற்றில் இருந்தே பொருள்கள் மீட்க முடியாமல் இருக்கின்றன, 12

## கோழிகளுக்கு தடுப்பூசி மருந்து

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கோழிகளுக்கு அம்மை நோய் தடுப்பூசி மருந்து முதல் தடவையாக வந்து சேர்ந்துள்ளது

கோழிக்குஞ்சுகளுக்கு ஒரு மாதத்திலும், நான்கு மாதத்திலும் இந்த அம்மை நோய்த் தடுப்பூசி மருந்துகள் போடவேண்டும் என்று வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார். 13

## கண்டெடுத்த சாக்குப் பொதி

வீதியில் கண்டெடுக்கப்பட்ட சாக்குப்பொதி ஒன்று முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த அடையாளம் காண்பித்து அலுவலக நேரம் பெற்றுக்கொள்ளலாம்

மக்கள்...

தமுக்கொண்ட வீரவேங்கை ஜீவராணி ஜேம்ஸ - மல்லிகா (இளவாலை) யின் புகழுடம்பு கடந்த வியாழன் பிற்பகலில் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பெருந்தொகையான மக்கள் நேரில்வந்து தங்கள் இறுதி அஞ்சலியைசெலுத்தினார்கள்.

## ஒன்பது தமிழ்க்கிராமங்களில் சிங்கள முஸ்லிம் குடியேற்றம்

செட்டிகுளம் - வவுனியா பகுதியில் படையினரின் வசமாகவுள்ள ஒன்பது தமிழ்க் கிராமங்களில் முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இப்பகுதிகளிலுள்ள பெரிய புளாங்குளம், நெடுங்கரைச் சேனை, பெரிய நொச்சி முனை, கிட்டங்குளம் முதலியான் குளம். கிரியாங்குளம். கரம்பை மடு. முசுந்தான் குளம், பாவற்குளம் ஆகிய தமிழ்க் கிராமங்களிலேயே இக்குடியேற்ற நடவடிக்கை தீவிரப்படுத்தப்படவுள்ளன

இங்குள்ள தமிழ் மக்கள் மடு முகாமிலும் வேறு பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது

## ஒய்வூதியருக்கு வதிவிட பிரிவில் புகையிரத ஆணைச் சீட்டு

ஒய்வூதியர்களுக்கு அவர்கள் வதியும் பிரதேச செயலகங்களினால் உதவி அரச அதிபர் புகையிரத ஆணைச்சீட்டு வழங்குவது சம்பந்தமாக கடந்த வெள்ளி யாழ். செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது

இதில் ஒய்வூதியப் பகுதி அதிகாரிகள் வலி மேற்கு ஒய்வூதியர் சங்கச் செயலாளர் மற்றும் பொருளாளருடன் வட மாநில ஒய்வூதியர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவரும், செயலாளரும் கலந்து கொண்டனர்

ஒய்வூதியப் பணிப்பாளர் ஏற்றுக் கொண்டபடி ஒய்வூதியர்கள் வதியும் உதவி அரசாங்க அலுவலர் அலுவலகத்திலேயே புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்படுவதற்கு அவ்வாறு பெற விரும்புவோர்களின் பட்டியலை ஒவ்வொரு சங்கமும் செயலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டது

புகையிரத ஆணைச்சீட்டு ஒய்வூதியம் பெறும் வங்கி உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே வழங்கப்படலாம்என்ற நடைமுறையை மாற்றி வங்கிக்குப் பதில வதிவிடப் பிரதேசமே அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதையும் இதை அமுல்செய்ய வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறும் சம்மேளனம் அரச அதிபரைக் கேட்டுக்கொண்டது.

## ஆயுர்வேத வைத்தியத்துறை சுயாதீனமாக இயங்கும்?

பல்கலைக்கழகத்தில இருந்து இது வரை இயங்கிவந்த ஆயுர்வேத வைத்தியத்துறையை சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து ஆயுர்வேத மருத்துவ பீடம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளனர்

இவர்களுக்கு ஆதரவாக மாணவர்களுடன் சேர்ந்து சில எதிர்க்கட்சிகளும் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவும் கோஷம் எழுப்பியுள்ளனர்.

## மலையகத்தில் மண்சரிவு ரயில் தடம் புரண்டது

மலையகத்தில தற்போது பெய்யும் கடும் மழையினால மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன

வட்டவளை ரயில நிலையத்துக்கு அருகில புகையிரதப் பாதை அடித்துச் செல்லப்பட்டது இதனால சரக்கு ரயில ஒன்றும் தடம்புரண்டது

பதுளை - கொழும்பு ரயில சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் - கொழும்பு வீதியில கினிகத்தேனைக்கு அருகில மண்சரிவினால பாதை துண்டிக்கப்பட்டது.

## தோட்டத் தொழிலாளர் மீது நானுஓயாவில் தாக்குதல்

நானுஓயா நகரில சிவில் உடையில வந்த பொலிஸார் தோட்டத் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து நானுஓயா ஊடசோ, எடின்பரோ தோட்டங்களின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

இதனைதொடர்ந்து நுவரேலியா பொலிஸ சுப்பிரிண்டன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்டது இதனையடுத்து வேலை நிறுத்தமும் கைவிடப்பட்டது

## நரசிம்மராவ் பேத்தியை கடத்த முயற்சி

பிரதமர் நரசிம்மராவின் பேத்தியை பம்பாயில் வைத்துக் கடத்த சீக்கிய தீவிரவாதிகள் முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.